ID. 22/2020
30-01-2024

M. W. 1 சக்திவேல்
குறுக்கு விசாரணை : தொடர்ச்சி

விபத்து நடந்த இடத்திற்கு சம்பவ தினத்தன்று காலை 09.10 மணிக்கு தான் சென்றுள்ளதாக Ex. M. 10 - ல் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரி. ஏற்கனவே உங்கள் குறுக்கு விசாரணையின் போது காலை 6.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரி, ஆனால் 4 வருடங்கள் ஆனபடியால் ஞாபகமின்மையால் அவ்வாறு சொல்லிவிட்டேன். Ex. M. 10-ல் மனுதாரர் வாகனத்தை அதிவேகமாக ஓட்டியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. ஓட்டுனரிடம் வாக்குமூலம் பெற்றது நீங்களா என்றால் இல்லை அலுவலகத்தில் பெற்றுள்ளார்கள். விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ள இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரி. தேசிய நெடுஞ்சாலையில் குறைந்தபட்ச வேகம் என்னவென்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தேசிய நெடுஞ்சாலையில் குறைந்தபட்ச வேகம் 80/கி.மீ என்று உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பொதுவாக தேசிய நெடுஞ்சாலையில் வேகத்தை பற்றிய குறிப்பு இருபுறமும் குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் சரி. Ex. M. 13 சாலை பயன்படுத்துவோரின் குறிப்பு என்று தலைப்பு கொண்டுள்ள ஆவணத்தில் 2 பக்கத்தில் Skid மார்க் உள்ளதா என்ற இடத்தில் ஆம் என்றஇடத்தில் டிக் மார்க் உள்ளதா என்றால் சரி. அது வண்டி டயர் தேய்த்து நிற்பது குறித்து குறிப்பிடுகிறது என்றால் சரி. பிரேக் போடும் போது அவ்வாறு ஏற்படும். விபத்துக்குள்ளான பகுதி சருக்கலான இடம் என்றால் சரி. Ex. M. 11 ஆவணத்தில் மனுதாரர் தன்கு எதிரே வேகமாக வந்த வாகனத்தை பார்த்தால் பெரிய விபத்தை தவிர்க்க வேண்டி வாகனத்தின் வேகத்தை குறைத்து இடதுபுறமாக திருப்பியுள்ளார் அதனால் எதிர்பார்க்காத விதமாக அரசு

வாகனத்தின் முன்புறமாக சென்று கொண்டிருந்து இருசக்கர வாகன ஓட்டி விபத்துக்குள்ளாகியுள்ளது ஆகையால் மனுதாரரின் தவறு ஒன்றும் இல்லை என்றால் சரியல்ல, மனுதாரர் எதிரே வரும் வாகனங்களை எதிர்நோக்கி தான் வண்டியை இயக்க வேண்டும் மேலும் அவர் வேகத்தை குறைத்தாலும் குறைத்ததாக சொன்னாலும் சாலையின் வெள்ளைக்கோட்டை தாண்டியிருக்க கூடாது அவ்வாறு தாண்டியதால் தான் இழப்பு ஏற்பட்டது. இரு சக்கர வாகனம் தூக்கி எறியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள் அது எந்த பக்கத்தில் என்றால் இடது பக்க குழியில். Ex. M. 13 -ல் அரசு வாகனத்தில் என்ன சேதம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் வாகனத்தின் முன்இடது பக்கத்தில் சேதம் ஏற்பட்டுள்ளது. அதன் மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.1000/- இருக்கும். நீங்கள் விபத்து அறிக்கை தாக்கல் செய்யும் பணியில் எத்தனை வருடங்களாக பணி பார்க்கிறீர்கள் என்றால் 5 வருடங்களாக இருக்கிறேன். 5 வருட காலங்களில் நீங்கள் பார்த்த விபத்துகளில் அரசு வாகனத்தின் மீது தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சிறிய வாகனத்தின் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்படும். பொதுவாக விபத்து ஏற்படும் போது விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களில் கனரக வாகனத்தின் மீது தான் காவல் துறை வழக்கு பதிவு செய்யும் என்று சொன்னால் சரியல்ல. Ex. M. 14 ஆவணமானது விபத்து இழப்பு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு என்றால் சரி. அந்த தீர்ப்பில் அரசு பேருந்தின் ஓட்டுனர் விபத்தை தவிர்க்க வேண்டி வாகனத்தை நிறுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரி. அதேபோல் இருசக்கர வாகன ஓட்டி தான் விபத்திற்கான காரணமானவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. Ex. W. 1- குற்றவியல் நீதிமன்ற தீர்ப்பில் விபத்தை நேரடியாக யாரும் பார்க்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. Ex. M. 5- உள்விசாரணை அறிக்கையிலும் குறுக்கு விசாரணையின் போது வேகமாக ஓட்டவில்லை என்று நிர்வாக சாட்சி ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் இடத்தின்

தன்மையை பார்த்து ஓட்டியிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. Ex. M.6- ஆவணத்தில் உள்ளக விசாரணை முடிவில் விசாரணை அதிகாரி "மனுதாரர் வண்டியைமெதுவாக ஒட்டி பெரிய விபத்தை தடுத்துள்ளதையும் இருசக்கர வாகன ஓட்டியின் தவறைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது மனுதாரர் சொன்ன கூற்றை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. Ex. M. 15 - என்பது 12(3) செட்டில்மெண்ட் என்றால் சரி. 12(3) செட்டில்மெண்ட் எழுதப்பட்ட சட்டமோ இயற்றப்பட்ட தீர்ப்போ அல்ல என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நீங்கள் தாக்கல் செய்துள்ள நிலையாணை என்பது வெறும் நிலையாணையே தவிர சான்றிடப்பட்ட நிலையாணை இல்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அரசு வெளியிட்ட நிலையாணை உங்கள் அலுவலகத்தில் உள்ளதா என்றால் உள்ளது. அப்படியென்றால் நீங்கள் அரசு வெளியிட்ட நிலையாணையைத் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரி. ஆகையால் நீங்கள் மனுதாரர் மீது பொய்யான குற்றச்சாட்டு கூறி அவர் மீது தண்டனை சுமத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆகையால் நீங்கள் வழங்கியிருக்கும் தண்டனை ரத்து செய்து மனுவில் கோரியுள்ள படி தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல. சட்டப்படி மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி.**

Advocate